# <u>குளித்தலை நகராட்சி</u>

11.10.2021.ஆம் தேதி திங்கட்க்கிழமை மாலை 5.00 மணிக்கு
நகராட்சி ஆணையர் அறையில் நடைபெற்ற அவசரக்கூட்டம்

ப.சுப்புராம்,
ஆணையர் மற்றும் தனி அலுவலர்,
குளித்தலை நகராட்சி.

-------

பொருள்– 01. குளித்தலை நகராட்சி 24 வார்டு பகுதிகளிலும் உள்ள பொதுமக்களுக்கு குளோரினேசன் செய்யப்பட்டு சுகாதாரமான முறையில் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. இப்பணியில் அவ்வப்போது குழாய் உடைந்தால் சரிசெய்வது, குடிநீர் சேகரிப்பு நிலைய மோட்டார் இயக்குதல், மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியிலிருந்து குடிநீர் விநியோகம், குடிநீர் தொட்டிகளை அவ்வப்போது சுத்தம் செய்தல் மற்றும் இதர பணிகளை மேற்கொள்ள போதிய பணியாளர்கள் இல்லாத காரணத்தால், நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.21787/2021/இஏ–2, நாள்–02.10.2021.ல் வழங்கியுள்ள வழிமுறைகளுக்கிணங்க, வெளிக்கொணர்வு முகமை மூலம் ஒப்பந்த அடிப்படையில் பணியாளர்களை அமர்த்தி பணி மேற்கொள்ள ஆகும் உத்தேச செலவினம் ரூ.22,000,00/–க்கும் (ரூபாய் இருபத்து இரண்டு லட்சம் மட்டும்), அதற்கான நிர்வாக அனுமதி வேண்டி, கருத்துருவை நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு அனுப்பி வைக்கவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு– 1). மன்றம் அனுமதிக்கலாம்.
2). மேற்கண்ட செலவினத்தை குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.1680/2021/இ1)

பொருள்– 02. குளித்தலை நகராட்சி 24 வார்டு பகுதிகளிலும் உருவாகும் குப்பைகளை பொது சுகாதாரப் பிரிவு பணியாளர்கள் மூலம் சேகரம் செய்து, மக்கும் குப்பை மற்றும் மக்காத குப்பை என பிரித்து உரக்கிடங்கிற்கு அனுப்பி வைக்கும் பணி, கழிவுநீர் தேங்காவண்ணம் மழைநீர் வடிகால் சுத்தம் செய்யும் பணி மற்றும் இதர சுகாதார பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இப்பணிக்கு போதிய பணியாளர்கள் இல்லாத காரணத்தால், நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.21787/2021/இஏ–2, நாள்–02.10.2021.ல் வழங்கியுள்ள வழிமுறைகளுக்கிணங்க, வெளிக்கொணர்வு முகமை மூலம் ஒப்பந்த அடிப்படையில் பணியாளர்களை அமர்த்தி பணி மேற்கொள்ள ஆகும் உத்தேச செலவினம் ரூ.1,48,000,00/–க்கும் (ரூபாய் ஒரு கோடியே நாற்பத்து எட்டு லட்சம் மட்டும்), அதற்கான நிர்வாக அனுமதி வேண்டி, கருத்துருவை நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு அனுப்பி வைக்கவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு– 1). மன்றம் அனுமதிக்கலாம்.
2). மேற்கண்ட செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.1679/2021/எச்1)

..2..

| | |
|---|---|
| பொருள்– 03. | நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.18698/2021/பி2, நாள்– 27.09.2021.ல் தெரிவித்துள்ளவாறு, கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் பணிகள் மேற்கொள்ள, குளித்தலை நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள மண்சாலைகளை கீழ்க்கண்ட விபரப்படி தார்சாலைகளாகவும் மற்றும் சிமெண்ட் சாலைகளாகவும் மாற்றியமைக்க மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| வ. எண். சாலையின் விபரம் நீளம் மதிப்பீடு தொகை (லட்சத்தில்)<br><br>1) மண்சாலைகளை தார்சாலையாக மாற்றியமைத்தல் 1989 – மீட்டர்<br>ரூ. 277.80<br><br>2) மண்சாலைகளை சிமெண்ட் சாலையாக மாற்றியமைத்தல் 592 – மீட்டர்<br>ரூ. 66.20<br><br>மொத்தம்<br><br>ரூ. 344.00 | | | |

மேற்கண்ட விவரப்படி தயார் செய்யப்பட்ட பணிகள் மேற்கொள்ள நிர்வாக அனுமதி வேண்டி, அதற்கான கருத்துருவை நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு அனுப்பி வைக்கவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு–மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.1594/2021/இ1)

பொருள்– 04.

குளித்தலை நகராட்சியின் கீழ்க்கண்ட ஆண்டுக் குத்தகை இனங்களுக்கு தொடர்ந்து **5(ஐந்து)** முறை ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோரியும், ஏலத்தில் கலந்துகொள்ள எவரும் முன்வராத காரணத்தால், கீழ்க்கண்ட விபரப்படி செலுத்த வேண்டிய வைப்புத் தொகை மற்றும் கூடுதல் வைப்புத் தொகை மறு நிர்ணயம் செய்ய அனுமதி வேண்டப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| வ. எண்.<br>உரிமம் விபரம்<br>வைப்புத் தொகை<br>கூடுதல் வைப்புத் தொகை<br><br>1) பேருந்து நிலையத்திற்குள் வந்து செல்லும் பேருந்துகள் மற்றும் ஆட்டோ முதலிய வாகனங்களுக்கு நுழைவு கட்டணம் வசூல் செய்யும் உரிமம்<br>3,00,000/–<br>2,00,000/–<br><br>2) 2–சக்கர ஊர்திகள் நிறுத் | | | |

அலுவலக குறிப்பு– மேற்கண்ட குத்தகை உரிமம் இனங்களுக்கு தொடர்ந்து பலமுறை ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோரியும், தொகை செலுத்தி ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோர எவரும் முன்வராத காரணத்தால் மேற்கண்டவாறு நிர்ணயம் செய்யப்பட்ட தொகையினை மன்றம் ஏற்கலாம்.

**(ந.க.எண்.1769/2020/அ1)**

**..3..**

பொருள்– 05. குளித்தலை நகராட்சியில் பணிபுரியும் தூய்மை பணியாளர்கள், துப்புரவு மேற்பார்வையாளர்கள், அலுவலக உதவியாளர்கள் மற்றும் மின் பணியாளர்கள், ஓட்டுநர்களுக்கு 2021–2022ஆம் ஆண்டுக்கான சீருடைகள் வாங்குவதற்கு, அரசாணை எண்.60, நாள்–03.03.2016இன்படி, Tamil Nadu Textile Corporation Ltd., Coimbatore அரசு சார்பு நிறுவனத்திடம் பணியாளர்களுக்கு சீருடை வாங்கி வழங்குவதற்கும் மற்றும் தையல்கூலி பணியாளர்களுக்கு வழங்குவதற்கும் ஆகும் உத்தேச செலவினம் ரூ.2,00,000/–க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு– மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.1664/2021/எச்1)

பொருள்– 06. கொரோனா வைரஸ் தொற்று அதிவேகமாக பரவி வருவதால், இந்நகராட்சி பகுதியில் தொற்று பரவாமல் தடுக்கும்பொருட்டு, மாபெரும் தடுப்பூசி முகாம்கள் நடத்தப்பட்டு வருகிறது. நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் செயல்முறை ந.க.எண்.5773/2020/ஜே2, நாள்–11.09.2021.இன்படி, மேற்கண்ட முகாம் தொடர்பான செலவினங்கள் மேற்கொள்ள ஆகும் உத்தேச செலவினம் ரூ.2,00,000/–க்கு (ரூபாய் இரண்டு லட்சம் மட்டும்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு– மன்றம் அனுமதி வழங்கலாம்.
(ந.க.எண்.650/2021/எச்1)

பொருள்– 07. குளித்தலை நகராட்சியில் தினமும் குடிநீர் விநியோகம் , குடிநீர் குழாய் பைப்புகள் உடைப்பு ஏற்பட்டால் அதனை சரிசெய்வது மேலும், தெருவிளக்குகள் நகராட்சியால் பராமரிக்கப்பட்டு வருகிறது. மூன்று நபர்கள் மட்டுமே நிரந்தர பணியாளர்கள் உள்ளனர் அவர்களுக்கு உதவியாளர்கள் தேவைப்படுகிறார்கள். மேலும், இரண்டு குடிநீர் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் உள்ளன. அதற்கு பகல் மற்றும் இரவு நேரங்களுக்கு காவலர் பணிக்கு நபர்கள் தேவைப்படுகிறார்கள். எனவே, மேற்கண்ட பணியாளர்கள் மிகவும் அவசியம் தேவைப்படுவதால் இப்பணியினை மேற்கொண்டுவரும் பணியாளர்கள் 7 நபர்களை தொடர்ந்து ஏழு மாதங்களுக்கு (01.12.2021 முதல் 30.06.2022 வரை) நீட்டிப்பு செய்து பணி மேற்கொள்ளவும், (இதற்கு உண்டான செலவுத் தொகை ரூ.7.00 இலட்சம்) மேற்கண்ட பணியாளர்களை அமர்த்திடவும், செலவினத்திற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு–
1). அனுமதி வழங்கலாம்.
2). மேற்கண்ட செலவினத்தை 2021–2022.ஆம் ஆண்டு குடிநீர் நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.1066/2019/இ1)

பொருள்– 08. குளித்தலை நகராட்சியில் எரிவாயு தகன மேடை அமைக்க, தமிழ்நாடு சட்டமன்ற அறிவிப்பு 2021–2022.ல் மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள் 2021–2022ஆம் ஆண்டு சட்டமன்ற கூட்டத் தொடரில் நிர்வாக மான்ய கோரிக்கையின்போது வெளியிட்ட அறிவிப்பு எரிவாயு தகன மேடை அமைக்க நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. எனவே, இதற்கு ஒதுக்கப்பட்ட இடத்தினை தல ஆய்வு செய்வதற்கும், மண் பரிசோதனை மற்றும் கட்டட வடிவமைப்பு பெறுவதற்கும் அரசு அனுமதி பெற்ற பொறியியல் கல்லூரிக்கு செலுத்துவதற்கும், மேற்கண்ட பணிகள் செய்வதற்கான உத்தேச லெவினம் ரூ.2.00 லட்சத்திற்கு (ரூபாய் இரண்டு லட்சம் மட்டும்) மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு–
1). மன்றம் அனுமதிக்கலாம்.
2). மேற்கண்ட செலவினத்தை 2021–2022.ஆம் ஆண்டு பொது நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.1475/2021/இ1)

..4..

பொருள்– 09. நகராட்சி அலுவலகத்தில் பணியாளர்களுக்கு உரிய கழிப்பிடம் மிகவும் மோசமான நிலையில் பயன்படுத்த இயலாத நிலையில் இருப்பதால், புதிதாக கட்டடம் அமைக்க உத்தேசிக்கப்பட்டு மதிப்பீடு ரூ.6.00 இலட்சத்திற்கு (ரூபாய் ஆறு லட்சம் மட்டும்) தயார் செய்யப்பட்டது. மேற்கண்ட மதிப்பீட்டில் தகர சீட்கொண்டு மேலே மூட எதிர்நோக்கி தயார் செய்யப்பட்டது. இந்நிலையில் கட்டிடத்தின் அருகில் உள்ள வீட்டுக்காரார்கள் நாங்கள் வசித்து வருகிறோம். கான்கிரீட் போட்டு பாதுகாப்பு கொடுக்க வேண்டுமாய் கோரப்பட்டது. எனவே, தற்போது கான்கிரீட் போடப்பட்டது. எனவே, மதிப்பீட்டைவிட கூடுதலாக வர வாய்ப்புள்ளது. எனவே, பைப் லைன், கதவு, மின் இணைப்பு இவைகள் செய்வதற்கு நிதி இல்லாததால், கூடுதலாக செலவுவரும் என்பதை எதிர்நோக்கி மதிப்பீடு ரூ.2.75 லட்சத்திற்கு (ரூபாய் இரண்டு லட்சத்து எழுபத்து ஐந்தாயிரம் மட்டும்) தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட தொகைக்கும் பணி செய்யவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு–
1). மன்றம் அனுமதிக்கலாம்.
2). செலவினத்தை 2021–2022.ஆம் ஆண்டு பொது நிதியில் மேற்கொள்ள அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.1811/2021/இ1)

*******

# குளித்தலை நகராட்சி

11.10.2021.ஆம் தேதிய அவசரக்கூட்டத் தீர்மானங்களின் உண்மைநகல்

| வ. எண். | பொருள் எண். | தீர்மானம் எண். | தீர்மான விபரம் |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1 | 1 | 249 | அனுமதிக்கப்பட்டது. |
| 2 | 2 | 250 | அனுமதிக்கப்பட்டது. |
| 3 | 3 | 251 | அனுமதிக்கப்பட்டது. |
| 4 | 4 | 252 | ஏற்கப்பட்டது. |
| 5 | 5 | 253 | அனுமதிக்கப்பட்டது. |
| 6 | 6 | 254 | அனுமதிக்கப்பட்டது. |
| 7 | 7 | 255 | அனுமதிக்கப்பட்டது. |
| 8 | 8 | 256 | அனுமதிக்கப்பட்டது. |
| 9 | 9 | 257 | அனுமதிக்கப்பட்டது. |

ஒம்/—ப.சுப்புராம்,
ஆணையர் மற்றும் தனி அலுவலர்,
குளித்தலை நகராட்சி.

/ உண்மை நகல் /

ஆணையர்,
குளித்தலை நகராட்சி.